தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1983 பிப்ரவரி 11

தை 29, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு, 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்''

தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களை ஒழுங்குபெறத் தொகுத்து இனிமையாகச் சொல்லக் கூடிய ஆற்றல் உடையோரிடம் இவ்வுலகில் உள்ளோர் தாமே விரைந்து சென்று, அவருடைய கட்டளைகளை ஏற்று, அவற்றின்படி செயல்படுவர்.

இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. ரா. கனகசபை மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ரா. கனகசபை அவர்கள் 9—2—1983 ஆம் தேதியன்று மறைந்ததை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கனகசபை அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தெரிந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றி உள்ளார்கள்.

நாடாளுமன்றம் மக்கள் அவையில் 1950 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையும மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்கள். கூட்டுறவு இயக்கத்தில் மிகவும் ஈடுபாடு உள்ள அவர் இம்மாநிலத்திலுள்ள பல கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, 9 ஆண்டுகள் தமிழக கூட்டுறவு மைய வங்கியின் தலைவராக சிறந்த முறையில் செயலாற்றி வந்துள்ளார். அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் செயலாட்சிக் குழு, தேர்வுக் கழகம் ஆகியவற்றிலும் உறுப்பினராக பணிபுரிந்துள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

அரிசிக் கடத்தல் தடுப்புச் சோதனைச் சாவடிகளில் நியமிக்கப் பெற்றுள்ள துணைத் தாசில்தார்கள்.

*வினா எண் 225—திரு. டி. மணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 20—1—1981 நாளைய அரசு ஆணை 33ன்படி அரிசி கடத்தல் தடுப்புச் சோதனைச் சாவடிகளில் நியமனம் பெற்ற துணைத் தாசில்தார்களை திடீரென குறைத்துள்ளதற்கு காரணம் என்ன?

(ஆ) தர்மபுரி, சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள மாநில எல்லைச் சோதனைச் சாவடிகள் அனைத்திலும் உள்ளது போல் குமரி மாவட்டத்திலுள்ள மாநில எல்லைச் சோதனைச் சாவடிகள் அனைத்திலும் துணைத் தாசில்தார்கள் நியமிக்காததன் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (அ) 20—1—1981 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட லெவியை செயல்படுத்தத் தேவையான சோதனைச் சாவடிகளை அமைத்து அவற்றுக்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். 8—5—1981க்குப் பிறகு லெவி வசூலாகும் வாய்ப்புக் குறைந்ததால் தஞ்சை மாவட்ட எல்லையிலும் கேரள மாநில எல்லையிலும் உள்ள சோதனைச் சாவடி களைத் தவிர மற்றவை அகற்றப்பட்டதால் துணைத் தாசில்தார்களும், வருவாய் அலுவலர்களும் குறைக்கப்பட்டனர்.

(ஆ) சோதனைச்சாவடியில் எந்நிலை அரசு அலுவலர் நியமிக்கப்படவேண்டுமென்ற முடிவு, அந்தச் சாவடி அமைந்துள்ள இடம், அந்தச் சாலை வழியாக நடந்துவரும் போக்குவரத்து போன்ற பல பொருள்களை சீர்தூக்கிப் பார்த்தபின் எடுக்கப் படுகிறது. அவ்வாறு பார்க்கும்போது குமரி மாவட்டத்தில்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS